சுற்று நிருப கடித இலக்கம் :- 02 - 142 /2015

எனது இலக்கம் : HP/HF/Dir/AW/2015-04
சுகாதார அமைச்சு போசனை மற்றும் சுதேச மருத்துவம்
இல.385 வண பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை
கொழும்பு-10
28.10.2015

அணைத்து உதவி சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
பணிப்பாளர் ( மூன்றாம் நிலை கவனிப்பு சேவைகள்)
பணிப்பாளர் (வைத்திய சேவைகள்)
பணிப்பாளர் (தாய் சேய் நலம்)
அணைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
அணைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
அணைத்து பணிப்பாளர்கள் / சுகாதார அத்தியட்சகர்கள் / வைத்தியசாலைக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள்/ அணைத்து தனியார் வைத்தியசாலை தலைவர்கள்

## பிறப்புகள் பதிவு அனுசரனை

**நடைமுறைப்படுத்தும் பத்திரம் - வைத்தியசாலையில் பிறப்பு நிகழ்ந்தது தொடர்பான தகவல்கள்** (B-148)

ஒரு நாட்டின் தரமான முக்கிய புள்ளி விபரங்களை பராமரிக்க குழந்தைகள் பிறப்புப் பதிவு ஒரு அடிப்படை தேவையாகும். நாட்டில் உள்ள வைத்தியசாலைகளின் சாதனையாக பிள்ளைகள் பிறப்பு அண்ணளவாக 100% வைத்தியசாலையில் நடைபெறுகிறது. குழந்தைகள் பிறப்பு பதிவை பதிவதற்கு வசதிகள் செய்து கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை சம்மநதமாக வைத்தியசாலை பணிப்பாளர்கள் கூட்டம் மற்றும் பதிவாளர் நாயக திணைக்களத்திலிருந்தும் உள்ளீடுகள் பெறப்படும்.

குழந்தை பிறக்கும் போது உங்களது வைத்தியசாலையில் ஒரு உயிருள்ள குழந்தை பிறந்த தகவல் அறிக்கையை "வைத்தியசாலையில் ஒரு குழந்தை பிறந்தது தொடர்பான தகவல்கள் (B 148)" படிவத்தை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். குழந்யைின் பிறப்பை பதிவதற்கு இதை பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

தயவு செய்து கவனிக்கவும் வைத்தியசாலை தலைவர் 1-5 வரையுள்ள தற்போதைய படிவத்துக்கு (பிறந்த திகதி, குழந்தையின் பெயர், குழந்தையின் பால், பிறப்பின் போது நிறை, பல பிறப்புக்களாயின் குழந்தைகளின் எண்ணிக்கை) மட்டும் பொறுப்பாவார்

தயவு செய்து அறிவிக்கவும் அப்படிவத்தின் இறுதியில் கையொப்பம் இடுவதன் மூலம் இப்படிவத்தின் 6-8 வரையான விடயங்களுக்கு நீங்கள் பொறுப்பு கூறுவதாக அமையாது. (1-5 வரையானவற்றுக்கு மட்டும் நீங்கள் பொறுப்பு என்பதை மீள் பதிப்பு செய்யப்பட்ட படிவத்தில் பதிக்கப்பட்டுள்ளது)

மீள் பதிக்கப்பட்ட படிவம் கிடைக்கும் வரை தற்போது இறக்கும் படிவத்தை பயன்படுத்துமாறு உங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

டாக்கடர். P.G. மகிபால
சுகாதார வைத்திய சேவைகள் பணிப்பாளர்
சுகாதார அமைச்சு போசாக்கு மற்றும் சுதேச வைத்தியம்

பிரதி :- பதிவாளர் நாயகம் - உங்களது தகவலுக்கும் மற்றும் மேலதிக நடவடிக்கைகளுக்கும்